Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 30, 2024

வியாழக்கிழமை மே 30, 2024 | ஒளி: 09 கதிர்: 263 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## ஜனாதிபதித் தேர்தல்

# “எதிர்காலத்தில் நடக்கும்”

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கும் எந்தவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்வதாக கூறவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சாதக, பாதக அம்சங்களுடன் கூடியதாகவே காணப்படுவதாகவும், ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தினாலேயே இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்றவும் 30 வருட யுத்தத்தை வெற்றிகொள்ளவும் முடிந்ததுள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இளம் சட்டத்தரணிகளுடன் நடைபெற்ற What's Newசட்ட மறுசீரமைப்பு தொடர்பில் செவ்வாய்க்கிழமை (28) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் வகையில் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்றும் தற்போது நிறைவேற்று அதிகாரத்தின் பல பிரிவுகள் மாகாண சபைகளுக்கும் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்காலத்தில் ஜனாதிபதியின், அதிகாரங்களைப் பாராளுமன்றத்திற்குப் பகிர்ந்தளிப்பதற்கான சட்டமொன்றை நிறைவேற்றவிருப்பதாகவும் தெரிவித்தார். எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதித் தேர்தலொன்று நிச்சயமாக நடத்தப்படும் என்றும், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

இங்கிலாந்து பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதை யாரும் கேள்வி கேட்க முடியாது. அதுதான் பாராளுமன்றத்தின் உயர் அதிகாரம். பாராளுமன்றமே உச்சமானது.

தொடர்ச்சி P2

## உ/த பெறுபேறு திங்கள் வரும்




2023ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை, எதிர்வரும் திங்கட்கிழமை (03) வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் எதிர்பார்த்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மரப்பெட்டி விழுந்து இளைஞன் மரணம்



எச்.எம்.எம்.பர்ஸான்

மரப்பெட்டி விழுந்ததில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட மரப் பெட்டி ஒன்றை லொறியில் இருந்து வாழைச்சேனையில் வைத்து இறக்கும் போது அது தவறி விழுந்ததில் இளைஞன் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## மைத்திரிக்கு எதிரான தடை மீண்டும் நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் வகையில் விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 12ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் புதன்கிழமை (29) மீண்டும்

தொடர்ச்சி P2

## ISIS கைது விவகாரம்:

# விரிவுரையாளர் பிணையில் விடுவிப்பு



கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான புன்சர அமரசிங்க என்பவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (CID) கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் அஹமதாபாத் விமானி நிலையத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் எனக்கூறி சந்தேகத்தில் 4 பேர் இம்மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர் இந்த நால்வர் தொடர்பில் போலியான தகவல்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் விரிவுரையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# சூறாவளியின் தாக்கம் இன்று முதல் குறையும்

சூறாவளியின் தாக்கம் வியாழக்கிழமை (30) முதல் குறைவடையுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின் காரணமாக, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களில் நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் மழையுடனான வானிலை நிலவும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மழையுடனான வானிலை காரணமாக 10,483 குடும்பங்களைச் சேர்ந்த 39,156 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 8 மாவட்டங்களின் சில பிரதேச செயலகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே முக்கியம்



காலநிலை தொடர்பான அவசரகால சூழ்நிலைகளின் போது பாதுகாப்பான பாடசாலை சூழலை உறுதி செய்வதன் மூலம் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பில் முக்கிய கவனம் செலுத்துவதே எமது அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் முதன்மையான விடயமாகும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ரத்நாயக்கவை சந்தித்தார் ஜூலி



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்க்(Julie Chung), தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவை சந்தித்துள்ளார். நாட்டில் நடத்தப்படவுள்ள தேர்தல்கள் தொடர்பில் வினவுவதற்காக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## இருநாளும் பாடசாலை

பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் கல்வியமைச்சினால் விசேட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பாடசாலைகள் யாவும், மே. 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் வழமையைப் போல இயங்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒத்திவைக்கும் கோரிக்கைக்கு எதிர்ப்பு



ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்த கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக ஐக்கிய குடியரசு முன்னணி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## இரு பிள்ளைகளை தலைகீழாக தொங்க விட்ட ‘முக்கோண’ தாய்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு-ஏறாவூர் பொலிஸ் பிரிவில் 11 வயதான சிறுவனை மரமொன்றில் தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டு, கம்பால் அடித்து சித்திரவதை செய்ததுடன், இரண்டரை வயது ஆண் பிள்ளையைத் தொங்கவிட்டு, அடித்துத் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அவ்விரு பிள்ளைகளின் தாயாரான 28 வயதுடைய பெண், செவ்வாய்க்கிழமை (28) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட இரு சிறுவர்களையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதலாவதாக இந்து முறைப்படி திருமணம் முடித்த பெண், கணவனை விட்டுவிட்டு அவருக்குப் பிறந்த முதல் குழந்தையுடன் இஸ்லாம் மதத்துக்கு மாறி, முஸ்லிம் நபரொருவரை திருமணம் முடித்துள்ளார். அவ்விருவருக்கும் குழந்தைகள் இல்லை. இந்நிலையில், அவரையும் விட்டுவிட்டு புத்தளம் பகுதியிலுள்ள சிங்களவர் ஒருவரைத் திருமணம் முடித்துள்ளார். அவ்விருவருக்கும் இரண்டரை வயதில் ஆண் பிள்ளை உள்ளது. அவரையும் விட்டுவிட்டு, தன்னுடைய இரு பிள்ளைகளுடன் ஏறாவூர் சதாம் உசைன் கிராமத்துக்கு மீண்டும் வந்து அங்கு வாழ்ந்து வருகின்றார். இந்நிலையில் தனது 11 வயதுடைய மூத்த பிள்ளை, புகைத்தலில் ஈடுபட்டார் என அச்சிறுவனைப் பிடித்து மரமொன்றில் தலைகீழாகக் கட்டி தொங்க விட்டு கம்பால் தாக்கி சித்திரவதை செய்துள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்



# “எதிர்காலத்தில் நடக்கும்”

அமெரிக்க அமைப்பு வேறு. அமெரிக்க அமைப்பில், அவர்கள் ஒரு சட்டத்தை உருவாக்கும் போது, ஜனாதிபதிக்கும் நிறைவேற்று அதிகாரங்களையும், காங்கிரசுக்கும் சட்டமன்ற அதிகாரங்களையும், நீதிமன்றங்களுக்கு நீதித்துறை அதிகாரங்களையும் வழங்கினர்.

நமது நாடு சமஷ்டி முறையை பின்பற்றாததால் ஆங்கிலேய முறையை கடைபிடிக்கிறோம். இந்தியா ஒரு சமஷ்டி நாடாக இருந்ததால் சமஷ்டி முறைக்கு செல்ல வேண்டியிருந்தது. ஆனால் நாம் ஒரு சமஷ்டி நாடு அல்ல. நமது நாட்டில் சட்டம் இயற்றும் இறுதி அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளது.

இலங்கையில் பல ஆட்சி முறைகள் இருந்தன. ஒன்று ஆங்கிலேயர் கால முறைமை மற்றையது அதன்படியே அமைச்சரவை செயற்படுகிறது. மற்றையது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது. சட்டமியற்றும் அதிகாரங்கள் சட்டவாக்க சபையிடம் உள்ளது. அதன்படி ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்து தெரிவாகும் போது, சட்டவாக்க சபைக்கு மற்றொரு கட்சியிலிருந்து உறுப்பினர்கள் தெரிவாகலாம். சுவிட்சர்லாந்தின் பாராளுமன்ற முறையில், பாராளுமன்றத்தால் சமஷ்டி செயற்குழுவினால் ஏழு பேர் நியமிக்கப்படுவர். நிறைவேற்று அதிகாரம் சமஷ்டி சபையிடம் காணப்படும்.

அந்நாட்டு முறைமைக்கமைய இரண்டு பிரதான கட்சிகளுக்கும் தலா இரண்டு ஆசனங்கள் வழங்கப்படும். ஏனைய கட்சிகளுக்கு ஒரு ஆசனம் என்ற அடிப்படையில் ஒதுக்கப்படும். அவ்வாறு நியமிக்கப்பட்டும் உறுப்பினர்கள் நிறுவனங்களை பகிர்ந்து கொள்வது தொடர்பில் கலந்தாலோசிக்க முடியும். அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டே நிறைவேற்று அதிகாரத்தையும் செயற்படுத்துவர். அமைச்சரவைக்கு அமைச்சர்களை நியமிக்கவும் நீக்கவும் பிரதமருக்கு அதிகாரம் உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை, அந்த ஏழு பேரில் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்பர்.

மற்றைய முறை இலங்கையில் இருந்த டொனமோர் முறை. அந்த அமைப்பில், நிர்வாக அமைப்பு ஏழு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் சபாநாயகராக செயல்பட்டார். அந்த ஏழு பேரில் ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவர் அமைச்சராக பதவியேற்றார். அந்த அமைச்சர்களில் ஒருவர் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் மூன்று செயலாளர்களை ஆளுநர் நியமித்தார். அமைச்சர்கள் குழு, பத்து பேரைக் கொண்டது. இந்த பத்து பேரில் தலைமைச் செயலாளர் தலைவராக செயல்பட்டார். இந்த நிர்வாகக்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன் பிறகு பிரான்ஸ் முறைமை வந்தது. அதன் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மக்கள் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். இந்த முறையே இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதில் சாதக பாதகங்கள் இரண்டுமே உள்ளன என்றார்.

# மரப்பெட்டி விழுந்து இளைஞன் மரணம்

இவ்வாறு மரணமடைந்த இளைஞன் மீராவோடை தபாலகத்தில் பணிபுரியும் இப்றாகீம் என்பவரின் மகனான பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலய வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய முகம்மது றிமாஸ் என்பவராவார்.

மரணமடைந்த இளைஞனின் உடல் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே முக்கியம்

கொழும்பில் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கல்வி அமைச்சின் அதிகாரிகள், சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட அரச உயர் அதிகாரிகளுடன் அனர்த்த முகாமைத்துவ முன்னேற்பாடுகள் தொடர்பில் தனித்தனியாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மேற்படி அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் பின்னர், ஊடகவியலாளர்களைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர் அவசரகால சூழ்நிலைகளைத் திறம்பட எதிர்கொள்வதற்கான முறையான செயல் திட்டங்களைத் தயாரித்தல், அனர்த்த மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும் மாவட்ட குழுக்களைப் புதுப்பித்துச் செயல்படுத்தல் போன்ற விடயங்களில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

‘சுரகிமு’ நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, நாட்டிலுள்ள 10126 பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களின் தீவிர பங்களிப்புடன் உரிய பாடசாலை அதிபர்களின் கீழ் விசேட பாடசாலைக் குழுக்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள தாகவும் அமைச்சர் தென்னகோன் இதன்போது மேலும் தெரிவித்தார்.

**“ அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது சுரக்கிமு திட்டம் உட்பட செயலில் உள்ள திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் குறிப்பாக அவசரகால சூழ்நிலைகளின் போது பாடசாலை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது**

மேலும், பாடசாலை மட்டத்தில் அனர்த்த முன்னெச்சரிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அடிப்படை முதலுதவி பயிற்சி அளிப்பதுடன், பாடசாலைகளில் முறையான முதலுதவி பெட்டிகள் கிடைப்பதை உறுதிசெய்யவும் திட்டமிடப்பட்டு ள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது சுரக்கிமு திட்டம் உட்பட செயலில் உள்ள திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் குறிப்பாக அவசரகால சூழ்நிலைகளின் போது பாடசாலை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், குறித்த திட்டங்கள் தொடர்பாகச் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அவசரகால அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளின்போது, எதிர்நோக்கும் சில சட்ட ரீதியான சிக்கல்களை வழங்குவதற்குத் தேவையான தீர்வுகளை எடுப்பதற்குப் பல அமைச்சுகளுடன் ஆலோசனைகளை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் தென்னகோன் தெரிவித்தார்.

# விரிவுரையாளர் பிணையில் விடுவிப்பு

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே கலாநிதி புன்சரா அமரசிங்க இவ்வாறு போலியான தகவல்களை வெளியிட்டிருந்தார் என அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அதன் பின்னர், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். அவரை கோட்டை நீதிவான் நீதிமன்றில் புதன்கிழமை (29) ஆஜர்படுத்திய போது பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

# மைத்திரிக்கு எதிரான தடை மீண்டும் நீடிப்பு

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பின் பிரகாரம், கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சட்டப்பூர்வ உரிமை கிடையாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த பதவியில் மைத்திரிபால சிறிசேன பணியாற்றுவதைத் தடுக்கும் வகையில் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி இந்த முறைப்பாட்டை சந்திரிக்கா சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரத்நாயக்கவை சந்தித்தார் ஜூலி

தேர்தலை நடத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் இதன்போது அமெரிக்கத் தூதுவர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் வினவியுள்ளார்.

அரசியலமைப்பினூடாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய எதிர்வரும் தேர்தல்கள் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஆணைக்குழுவின் தூதுவர்கள், ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பலரும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்து எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் கடந்த சில நாட்களாகக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரு பிள்ளைகளை தலைகீழாக தொங்க விட்ட ‘முக்கோண’ தாய்

ஏப்ரல் மாதத்திலேயே இவ்வாறு சித்திரவதை செய்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

அதேவேளை, இரண்டாவது இரண்டரை வயது மகனையும் அடித்துத் துன்புறுத்தி வருவதாக அந்த பிள்ளையின் தந்தையான புத்தளத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவருக்குத் தெரியவந்துள்ளது. அதனையடுத்து உடனடியாக ஏறாவூருக்கு சென்று, தன்னுடைய மகனைத் தருமாறு அப்பெண்ணிடம் கேட்டுள்ளார். அதற்கு அப்பெண் மறுத்துவிட்டார்.

இதனையடுத்து அந்த தந்தை, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டை விசாரணை செய்த பொலிஸார், அந்த தாயாரின் அலைபேசியை சோதித்துள்ளனர். அதில், அவ்விரு சிறுவர்களையும் தடியால் அடித்துத் துன்புறுத்தியமை தொடர்பில் எடுக்கப்பட்ட வீடியோக்கள் இருந்துள்ளன.

அதன்பின்னர், அப்பெண்ணைக் கைது செய்த பொலிஸார், அவ்விரு பிள்ளைகளையும் மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அந்த பெண்ணை, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஏறாவூர் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# “காத்திருங்கள்; காத்திருக்கிறோம்”

## ICC, T20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு ISIS அச்சுறுத்தல்




அமெரிக்காவில் ஆரம்பமாகவிருக்கின்ற ICC, T20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதத் தாக்குதல் நடாத்தப்படும் வகையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதலுக்கான அச்சுறுத்தலை விடுக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் படமொன்று வெளியிடப்பட்டுள்ளன.

துப்பாக்கியை முதுகில் சுமந்தவாறு, முகமூடி அணிந்த நபரொருவர், நியூயோர்க் கிரிக்கெட் மைதானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் வகையில் இந்த படம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

“நீங்கள் போட்டிக்காகக் காத்திருங்கள்” என்று எழுதப்பட்டு, இரத்தச் சிவப்பு நிறத்தில் “நாங்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறோம்” என இந்த படத்திலுள்ள நபரின் மீது எழுதப்பட்டுள்ளது.

மேலும், இந்த வசனம் முடிவுறும் இடத்தில் டைனமைட் குச்சியுடன் கூடிய கடிகாரமொன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மைதானத்தில் ட்ரோன் கமராக்கள் பறக்கும் வகையிலும் இந்த படம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, “நாசாவ் ஸ்டேடியத்தில்” என குறிப்பிட்டு, 09/06/2024 என்ற திகதி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நாசாவ் ஸ்டேடியத்தில், இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி ஜூன் மாதம் 09ம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஊடகப் பேச்சாளர் கருத்து தெரிவித்துள்ளார்.

**“ “நீங்கள் போட்டிக்காகக் காத்திருங்கள்” என்று எழுதப்பட்டு, இரத்தச் சிவப்பு நிறத்தில் “நாங்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறோம்” என இந்த படத்திலுள்ள நபரின் மீது எழுதப்பட்டுள்ளது. மேலும், இந்த வசனம் முடிவுறும் இடத்தில் டைனமைட் குச்சியுடன் கூடிய கடிகாரமொன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், மைதானத்தில் ட்ரோன் கமராக்கள் பறக்கும் வகையிலும் இந்த படம் வடிவமைக்கப்பட்டுள்ளது**

“போட்டிக்கு வரும் அனைவரின் பாதுகாப்பும் எங்கள் முதல் முன்னுரிமையாகும், மேலும் எங்களிடம் விரிவான மற்றும் வலுவான பாதுகாப்புத் திட்டம் உள்ளது.” என அவர் கூறியுள்ளார்.

ICC T20 உலகக் கிண்ணப் போட்டி அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளை மையமாகக் கொண்டு ஜூன் முதலாம் திகதி முதல் ஜூன் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 24,645 டெங்கு நோயாளர்கள்



2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 24,645 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில் அதிகமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் 5,289 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 2,309 டெங்கு நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 1,307 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# ஒத்திவைக்கும் கோரிக்கைக்கு எதிர்ப்பு

இந்த அறிக்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையா, அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தா அல்லது ரங்கே பண்டாரவின் தனிப்பட்ட கருத்தா என்பது தெரியவில்லை, ஆனால், அந்த அறிக்கையின் மூலம் முன்வைக்கப்பட்ட பிரேரணையைத் தாம் கண்டிப்பதாக ஐக்கிய குடியரசு முன்னணி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தல் உள்ளிட்ட பிற தேர்தல்களையும் சரியான நேரத்தில் நடத்தத் தேர்தல் ஆணையம் உள்ளிட்ட கட்சிகள் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

# ஒவியக் கண்காட்சி










**எம்.எஸ்.எம்.நூர்தீன்**

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், மாணவர்களினால் தீட்டப்பட்ட ஓவியக் கண்காட்சி புதன்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக விழிப்பூட்டும் வகையில் இந்த ஓவியக் கண்காட்சி இடம்பெற்றுள்ளது. இதில் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள 12 பாடசாலைகளைச் சேர்ந்த 350க்கு மேற்பட்ட மாணவர்களின் ஓவியங்கள் வைக்கப்பட்டிருந்தன.

காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவு கலாசார பிரிவு மற்றும் சிறுவர் மகளிர் பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்த இந்த ஓவியக் கண்காட்சியினை காத்தான்குடி பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

# பேருந்து புரண்டதில் 29 பேர் காயம்



கொழும்பு- பதுளை பிரதான வீதியில் பெல்மடுல்ல நகருக்கு அருகில் தனியார் பேருந்தொன்றும் முச்சக்கர வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் 29 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிதுள்ளனர்.

எம்பிலிப்பிட்டியவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தில், எதிர்த்திசையில் இருந்து வந்த முச்சக்கரவண்டி மோதாமல் இருக்க பேருந்து சாரதி முயன்றுள்ளார்.

அப்போது, வீதியில் இருந்த மண் திட்டுடன் மோதி, பேருந்து சில அடிகள் கீழே வீதியில் கவிழ்ந்து இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்களில் பேருந்து மற்றும் முச்சக்கர வண்டியிலிருந்த நால்வர் அடங்குகின்றனர். காயமடைந்த 20 பேர் கெஹாவத்தை ஆதார வைத்தியசாலையிலும் ஒன்பது பேர் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வாகன விபத்தில் நால்வர் காயம்

**பு.கஜிந்தன்**




யாழ்ப்பாணம்- சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில், A9 வீதியில் வைத்து கனரக வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றுள்ளது.

கனரக வாகனத்தைத் திருப்ப முற்பட்டபோது பின்னால் வந்த முச்சக்கரவண்டி அதனுடன் மோதுண்டு இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த மூவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பார ஊர்தி குடைசாய்ந்ததில் சாரதிக்கு காயம்




**தீஷான் அஹமட்**

திருகோணமலை- கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 86ஆம் மைல் கட்டை பகுதியில் பார ஊர்தியொன்று குடைசாய்ந்ததில் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகி கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பார ஊர்தி கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பசளை ஏற்றிச் சென்றபோது, புதன்கிழமை (29) குடைசாய்ந்ததாகவும், பொலிஸார் குறிப்பிட்டுள்னர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிர்வாண படங்களை வெளியிட்ட காதலன்



17 வயதுடைய பாடசாலை மாணவியின் நிர்வாண புகைப்படங்களை இணையத்தில் வெளியிட்ட குற்றச்சாட்டில் 18 வயதுடைய பாடசாலை மாணவன் மத்தேகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவன் நுகேகொட பிரதேசத்தில் உள்ள பிரத்தியேக வகுப்பொன்றுக்குச் சென்று கொண்டிருந்தபோது, மத்தேகொட-குடமாதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவருடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்.

குறித்த மாணவன் அடிக்கடி மருந்து வகைகளை உட்கொள்வதை அறிந்த மாணவி அது தொடர்பில் வினவியபோது, மாணவனுக்குத் தீராத நோய் ஒன்று ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பின்னர் குறித்த மாணவி அவர்களின் காதல் உறவை முறித்துக்கொண்டு வேறொரு இளைஞனுடன் காதல் கொண்டுள்ளார் .

இதனால் கோபமடைந்த மாணவன், குறித்த இருவரும் காதல் உறவில் இருந்தபோது, வீடியோ அழைப்புகள் மூலம் 'ஸ்கிரீன் ஷாட்' செய்யப்பட்ட மாணவியின் நிர்வாண புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

மாணவியின் நண்பர்கள் சிலர் இந்த புகைப்படங்களைப் பார்த்து சம்பந்தப்பட்ட மாணவிக்கு தெரியப்படுத்தியதையடுத்து, இது தொடர்பில் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மத்தேகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பெண் கான்ஸ்டபிளின் ஏ.ரி.எம். அட்டையில் இழுத்த ஐவர் கைது

பெண் கான்ஸ்டபிளுக்குச் சொந்தமான வங்கி தானியக்க இயந்திர அட்டையை (ஏ.ரி.எம். அட்டை) எடுத்து பொருட்களைக் கொள்வனவுச் செய்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், கந்தேநுவர பொலிஸில் இணைந்து கடமையாற்றும் பெண் கான்ஸ்டபிள்கள் இருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேகநபர்களில், இணைந்து கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள், லக்கல பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர், ரத்தோட்டை உள்ளூராட்சி சபையின் மின்சார ஊழியர் ஆகியோரும் அடங்குவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை வெசாக் வலயத்தில் விகாரை மாவத்தையில் கடந்த 24ஆம் திகதியன்று விழுந்து கிடந்த ஏ.ரி.எம் காட் அட்டையில் 15,150 ரூபாய் பணம் மீள எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என அந்த பெண் கான்ஸ்டபிளினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே, வெசாக் வலயத்தில் கந்தேநுவர பொலிஸில் இருந்து வருகைதந்த பொலிஸார் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஏனையோரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# வாகை விழுந்ததில் தொழிலாளி மரணம்; மூவர் காயம்

**உமாமகேஸ்வரி**



வாகை மரமொன்று வேரோடு விழுந்ததில் பெண் தொழிலாளி ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் மூன்று பெண் தொழிலாளிகள் படுகாயமடைந்த நிலையில், காவத்தை மற்றும் இரத்தினபுரி பொது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காவத்தை பொலிஸ் பிரிவில் உள்ள ஓப்பாவத்தை 3ஆம் பிரிவு தோட்டத்திலேயே வாகை மரம் செவ்வாய்க்கிழமை (28) பிற்பகல் ஒரு மணியளவில் விழுந்துள்ளது.

தேயிலைச் செடிகளுக்கு உரம் போடும் வேலை முடிந்த பின்னர் வீடுகளுக்குத் திரும்பும் வேளையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. படுகாயமடைந்த நால்வரும் காவத்தை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த இருவரில் ஒருவர் ஆபத்தான நிலையில் காவத்தை வைத்தியசாலையிலும் மற்றவர் மிகவும் ஆபத்தான நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தாயான எஸ்.தமிழ் செல்வி (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த 36 வயதான சத்திய வாணி இரத்தினபுரி வைத்தியசாலையிலும் 45 வயதான ஜீவராணி மற்றும் 49 வயதான விஜயகுமாரி ஆகியோரும் காவத்தை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# "பெண்மையை கொண்டாடுவோம் வாருங்கள்"



சுகாதாரம் என்பது அடிப்படை உரிமையாக அமைந்திருந்தால், மாதவிடாய் சுழற்சி பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைத்திருக்கும் என உலக மாதவிடாய் சுகாதார தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உலக மாதவிடாய் சுகாதார தினத்தை முன்னிட்டு "பெண்மையை கொண்டாடுவோம் வாருங்கள்" என்ற தொனிப்பொருளில் வெள்ளவத்தை- மிராஜ் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை(28) நடைபெற்ற பெண்களின் மாதவிடாய் வறுமை தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2021இல் நாட்டில் உள்ள 54 இலட்சம் குடும்ப அடிப்படையிலான குடும்ப அலகுகளில் 15 முதல் 49 வயதுக்குட்பட்ட 53 இலட்சம் பெண்கள் மற்றும் சிறுமிகள் இருப்பதாக Advocata நிறுவனம் கண்டறிந்துள்ளது. இவர்களில் 50% பேர் மாதவிடாய் வறுமையால் பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த கருவிகள் மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதற்கான அணுகல் வரையறுக்கப்படுவதால், இந்த மாதவிடாய் வறுமை காரணமாக ஒரு பெண்ணின் அதிகபட்ச இலக்குகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு இழக்கப்படுகிறது என்றார்.

# பொறுப்பை துறந்தால் பாடம் கற்றுக்கொள்ளவே வேண்டும்

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முக்கியமான இரண்டு பெரும் கட்சிகள் தங்களுடைய வேட்பாளர்கள் யார்? என்பதைப் பகிரங்கமாக இன்னுமே அறிவிக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகியனவே அறிவிக்கவில்லை.

எனினும், ஜனாதிபதித் தேர்தல், ஒக்டோபர் 12 அல்லது 19 ஆம் திகதிகளில் ஒருநாளில் நடைபெறுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. தேர்தல்களை நடத்தும் அதிகாரத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழுவே கொண்டிருக்கின்றது. எனினும், கட்சிகளைச் சேர்ந்த பலரும் தங்களுக்குத் தேவையான வகையில் தேர்தல்களை மாற்றியமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன.

கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் இன்னுமே நடத்தப்படாது கிடப்பில் போடப்பட்டுள்ளன. இதனால், மக்களுக்கு நேரடியாகச் சென்றடையக்கூடிய பல வேலைத்திட்டங்கள் முடங்கிபோயியுள்ளன. இதனிடையே, பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதன் ஊடாக, பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்க முடியுமென, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவருக்குத் தெரியாமல், பொதுச் செயலாளர் இவ்வாறான அறிவிப்பொன்றை விட்டிருக்கமாட்டார். இல்லையேல், தலைவரால் அந்த அம்பு, பொதுச் செயலாளரை வைத்து ஏவப்பட்டுள்ளது. அம்பு வந்து விழுந்த உடனேயே கட்சிகள் பலவும் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

"தேர்தலை பிற்போடுவது ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமானதல்ல" என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும், "ஒத்திவைப்பு விளையாட்டு எம்மிடம் எடுபடாது" என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அனுரகுமார திஸாநாயக்க எம்.பியும், "அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது" ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கீன்ஸ் நெல்சனும் கருத்துரைத்துள்ளனர்.

69 இலட்சம் மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை 'அரகலய' போராட்டத்தின் ஊடாக மக்கள் விரட்டியடித்தனர். பாராளுமன்றத்தில் இருக்கும் 225 பேரின் மீதும் நம்பிக்கையை இழந்திருந்தனர். இவையிரண்டும் இன்னுமே அணைந்துவிடவில்லை. கனன்று கொண்டுதான் இருக்கின்றது.

அரசாங்கத்தின் செயற்றிட்டங்களை ஆரம்பத்தில் வரவேற்றிருந்த மக்கள், தற்போது கொஞ்சம், கொஞ்சமாக வெறுத்துவருகின்றனர். பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்பதற்கு இன்னும் பல வருடங்கள் தேவையெனும் நாடகத்தைப் பார்ப்பதற்கு மக்கள் தயாரில்லை என்பது பொதுவான கருத்தாகும்.

இவையெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் கடந்த ஆட்சிகளின் போது, தேர்தலை ஒத்திவைத்தமையால் ஆட்சியிலிருந்த கட்சிகள் முகங்கொடுத்த பின்னடைவுகளைப் பார்க்கவேண்டிய பொறுப்பும், மக்களின் ஜனநாயக உரிமையைக் கொடுக்கவேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திடம் மட்டுமே உள்ளது என்பதை நினைவில் கொள்க.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# இரட்டை வியூகம் வெற்றி பெறுமா?

**முருகானந்தம் தவம்**

இலங்கையில் விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கான பழைய கூட்டணி அமைத்தல், புதிய கூட்டணிகளை உருவாக்குதல், கட்சி தாவல்களுக்கு தயாராதல், புதிய, பழைய பிரபலங்களை உள்வாங்குதல், பேரம் பேசுதல்கள் என நாட்டில் தேர்தல் பரபரப்பு தொற்றி பிரசாரங்களும் வாக்கு வேட்டைகளுக்கான உத்தரவாதங்கள், அறிவிப்புக்களும் தாராளமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறான தேர்தல் பரபரப்புகளுக்கு மத்தியில்தான் சிறுபான்மைக் கட்சிகள் பங்காளிகளாகவுள்ள சஜித் பிரேமதாச தலைமையிலான இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நெருங்க, நெருங்க இராணுவ மயமாகி வருவதுடன் தமது ஆட்சியில் இராணுவத்திற்கு முன்னுரிமையளிக்கப்படுமென அக்கட்சியின் தலைவர் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியில் தாமரை மொட்டு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னர் தனது அரசில் உயர்பதவிகளுக்கு ஓய்வு பெற்ற இராணுவ கடற்படை, விமானப்படைத் தளபதிகளை நியமித்ததுடன் ஆளுநர்களாகவும் படைத்தளபதிகளை நியமித்தபோது நாட்டில் இராணுவ ஆட்சி நடப்பதாகக் கடுமையான கண்டனங்களையும் விசனங்களையும் வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்திதான் தற்போது தன்னை இராணுவ மயமாக்கி வருகின்றது

> **"இராணுவ வீரர்கள் தொடர்பான கட்டளைகள் காலத்திற்கு ஏற்றாற் போல் புதுப்பிக்கப்படும். ரணவிரு சேவா அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களும் ஏற்பாடுகளும் போதுமானதாக இல்லை. இராணுவ வீரர்களின் நலன்புரி செயல்பாடுகளுக்காகத் தனித்த திணைக்களம் உருவாக்கப்பட்டு, இராணுவ வீரர்களின் பிரச்சினைகளுக்குப் பதில் வழங்கும் நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார்**

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட கடந்த ஐக்கிய மக்கள் சக்தி தலைவரான சஜித் பிரேமதாச தோல்வியடைந்த நிலையில் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இந்தக்கட்சியில் சிறுபான்மையினக் கட்சிகளான சில தமிழ், முஸ்லிம் கட்சிகள் பங்காளிக் கட்சிகளாகவுள்ளன.

தமிழ், முஸ்லிம் கட்சிகளைப் பங்காளிக் கட்சிகளாகக் கொண்ட இந்தக்கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை கணிசமானளவில் பெற்று வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதாக எதிர்வு கூறப்பட்டு வரும் நிலையில் சிங்கள வாக்குகளை இலக்காகக்கொண்டு கட்சி இராணுவ மயப்படுத்தப்பட்டு வருகின்றது.

2020ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கான தேர்தலில் இலங்கை இராணுவத்தின் தளபதியாகவிருந்த ஓய்வு பெற்ற பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை தனது கட்சி வேட்பாளராக்கி அவரை பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்ததுடன், தனது அரசாங்கம் அமைந்தால் அதில் பாதுகாப்பு அமைச்சராக சரத் பொன்சேகா நியமிக்கப்படுவார் என்ற உத்தரவாதத்தையும் இந்தக் கட்சித் தலைவரான சஜித் பிரேமதாச அப்போது பொது மேடைகளில் வழங்கியிருந்தார்.


ஓய்வு பெற்ற இராணுவ மேஜரை வாழ் நாள் உறுப்பினராகவும் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதியை பாராளுமன்ற உறுப்பினராகவும் ஏற்கெனவே கொண்ட இந்தக் கட்சியில்தான் தற்போது முன்னாள் இராணுவ, கடற்படைத் தளபதிகள் படு தீவிரமாக இணைக்கப்பட்டு அவர்களுக்குக் கட்சியில் உயர் பதவிகளும் வழங்கப்பட்டு வருவதுடன் நாட்டில் அரசொன்றை அமைக்க இராணுவத்திலுள்ளவர்கள் தமது கட்சியில் இணைய வேண்டும் என்ற அழைப்பையும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இதுவரையில் முன்னாள் இராணுவத் தளபதி ஓய்வுபெற்ற ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க. இராணுவத்தின் முன்னாள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க மற்றும் ஓய்வு பெற்றவர்களான மேஜர் ஜெனரல் சமன் லியனகே ,மேஜர் ஜெனரல் அருண வன்னியாராச்சி, மேஜர் ஜெனரல் ஹேரத், மேஜர் ஜெனரல் அதுல கொடிப்பிலி, மேஜர் ஜெனரல் பிரியந்த நாபானகொட, மேஜர் ஜெனரல் வசந்த ஜயசூரிய, மேஜர் ஜெனரல் எச்.எம்.எம்.பி.ஹேரத், மேஜர் ஜெனரல் நிஷங்க ரணவன, மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து மேஜர் ஜெனரல் உபுல் விதானகே, மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே, பிரிகேடியர் மஞ்சுள விஜேசிங்க ஆகிய இராணுவத்தின் முன்னாள் தளபதிகள் இணைந்துள்ளனர்.

இவர்கள் மட்டுமன்றி, இலங்கை கடற்படையின் 14ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் தயா சந்தகிரி, முன்னாள் சிறப்பு அதிரடிப்படை தளபதியான ஓய்வு பெற்ற நிமல் லெவ்கே, ஆகியோரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளதுடன் இவர்கள் அனைவருக்கும் கட்சியில் பல்வேறு பதவி நிலைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் இராணுவத்தில் தனக்கு எதிராக செயற்பட்ட தளபதிகளும் கட்சியில் உள்வாங்கப்பட்டு உயர் பதவிகள் வழங்கப்பட்டதால் அதிருப்தியடைந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசாவுடன் முரண்பட்டதால் அவர் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அது தொடர்பிலான வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது.

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சி இராணுவ மயப்படுத்தப்பட்டு வரும் நிலையில் நாட்டைக் கட்டியெழுப்பும் மனிதாபிமானப் பணியில் பங்காளராகுமாறு இராணுவ வீரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். நாட்டிற்காகச் சிறந்த சேவையாற்றிய இந்த இராணுவ வீரர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களைக் கவனித்துக் கொள்வோம். நான் பதவியேற்று 48 மணித்தியாலங்களுக்குள் இராணுவ வீரர்களது பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட ஜனாதிபதி செயலணி ஒன்றினை தாபிப்பேன். இராணுவ வீரர்கள் தொடர்பான கட்டளைகள் காலத்திற்கு ஏற்றாற் போல் புதுப்பிக்கப்படும். ரணவிரு சேவா அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களும் ஏற்பாடுகளும் போதுமானதாக இல்லை. இராணுவ வீரர்களின் நலன்புரி செயல்பாடுகளுக்காகத் தனித்த திணைக்களம் உருவாக்கப்பட்டு, இராணுவ வீரர்களின் பிரச்சினைகளுக்குப் பதில் வழங்கும் நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார்.

சிறுபான்மையினக் கட்சிகளைப் பங்காளிகளாக வைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலில் தனதும் தனது கட்சியின் வெற்றிக்காகவும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளையும் எதிர்பார்த்துக் கொண்டு தென்னிலங்கை வாக்குகளைக் கவர்வதற்காகக் கட்சியை இராணுவ மயப்படுத்தும் எதிர்கட்சித் தலைவரான சஜித் பிரேமதசாவின் இந்த 'இரட்டை வியூகம்' வெற்றி பெறுமா என்பதனை சிறுபான்மையின மக்களின் வாக்குகள்தான் முடிவு செய்யும்.



## வாழ்வியல் தரிசனம்

அநேகமான பொய்மை யாளர்களுக்குத் தாங்கள் சொல்லும் பொய்கள் மிகவும் பிடித்துப் போகின்றது. சொல்லும் பொய் ஏதும் தற்காலிகமான பயன் பெற்றால், அதுவே பெரிய வெற்றி என கருதி பெருமைப் பட்டுக்கொள்கின்றார்கள்.

உலகில் விசித்திரமான நபர்கள் வாழுகின்றார்கள். ஒரு சமயம் கோவில் ஒன்றுக்குச் செல்வதற்கு நான், நடந்துகொண்டிருந்தேன். ஊர் புதிது ஆனபடியால் ஒருவிடம் கோவிலுக்குச் செல்லும் வழி எதுவென கேட்டேன். அவரும் செல்லும் வழியைச் சொன்னார்.

நான் அவர் சொன்னப்படி சென்றேன். ஆனால், அந்த நபர் என்னை பின் தொடர்ந்தார்.

உடனே, நான் நின்றபடி எதற்கு என் பின்னே வருகின்றீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவரோ, வழிகாட்டிய எனக்குக் காசு தரவில்லை என்றார். எத்தனை, எத்தனை பேர் வந்தும் போகின்றார்கள். வழிகாட்டக் காசா எனக் கேட்டபோது, சிரிப்பும் கோபமும் வந்தது. கையில் காசைக் கொடுத்ததும் சென்றுவிட்டார்.

எல்லோரும் ஒருமாதிரி இல்லை. ஆனால், எல்லோரையும் சகித்துத்தான் வாழவேண்டும்.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாலத்தை புனமைத்து தாருங்கள்



அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட ஒலுவில் அஷ்ரப் நகர் மக்கள் பாலம் உடைப்பெடுத்ததால் அதனைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வருட முற்பகுதியில் இந்நகர்ப் பகுதியில் பெய்த அடை மழையின் வெள்ளம் காரணமாக இப்பகுதி பிரதான வீதிகள் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியதுடன் ஒலுவில் நகரத்தையும் அஷ்ரப் நகரையும் இணைக்கின்ற பிரதான பாலம் பாரிய உடைப்பெடுத்துள்ளது.

இதனால் வழமை போன்று செயற்படுகின்ற இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவையும் இடம்பெறாததால் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 125 குடும்பங்கள் வாழ்கின்ற இப்பகுதியில் வீடு இல்லாப் பிரச்சினை பொது மையவாடி பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அத்துடன் குறித்த அஷ்ரப் நகரில் இருந்து பாலம் உடைவு காரணமாக ஒலுவில் பகுதியை நோக்கி அத்தியாவசியத் தேவைக்காக முச்சக்கரவண்டி ஒன்றிற்கு தலா 2000 ரூபா செலுத்திச் செல்வதாக குறிப்பிட்டுள்ளனர்.

- பாறுக் ஷிஹான்

# “வட்டி குட்டி போடும்”





றொசில்டா அன்டன்

அந்த கிராமத்தில் சீட்டு பிடிப்பதில் பெயர் பெற்றவள் நந்தினி.

வட்டிக்கும் பணம் கொடுத்து பணத்தை வசூலிப்பாள். கணவர் அரசாங்க பாடசாலை ஒன்றில் அதிபராக கடமையாற்றுகின்றார்.

மிகவும் மென்மையான மனிதர். யாரிடமும் அளவுக்கதிகமாய் பேச மாட்டார். பாடசாலை மட்டத்தில் மிக வறிய மாணவர்களுக்கு உதவி புரியும் நிறுவனங்களிடம் இருந்து உதவியைப் பெற்றுக் கொடுக்கும் நல்ல இரக்கமுள்ள மனிதன் “அந்த மனுசன் உழைப்பதே போதும் இவள் பணம் பணம் என்று பேயாக அலைகின்றாள்” பானுவும், சுகந்தியும் சீட்டுக்காரியை பற்றி உரையாடிக் கொண்டே கிணற்றடியில் ஆடைகளை துவைத்துக்கொண்டிருந்தார்கள். நந்தினி சீட்டு பிடிப்பதிலும், வட்டிக்கு பணம் கொடுத்து வசூலிப்பதிலும் பெயர் பெற்றவள். இதனாலே சீட்டு நந்தினி என பெயரும் பெற்றாள்.

> **ஆனால் நந்தினி சிறிதும் கவவையில்லாமல் பணத்திலே குறியாக இருந்தாள். சீட்டிலும் பலரை ஏமாற்ற தவறியதில்லை. போடும் சீட்டு எண்ணிக்கையை விட மேலதிகமாக ஒரு எண்ணை கூட்டி சீட்டு முடியும் தருவாயில் பத்தை பதினொன்றாக மாற்றுவாள்**

வட்டிக்கு வாங்கியவர்கள் இவளைக் கண்டாலே பயந்து ஒளிந்து விடுவார்கள்.

நந்தினியின் மகள் குயிலி அப்பா ருத்திரன் போல நன்றாக படித்து வேலைக்காக காத்திருக்கும் போதே திருமணம் முடித்து வைத்து விட்டாள் அம்மா நந்தினி. தாயின் நச்சரிப்பாலே இந்த திருமணத்திற்கு ஒத்துக்கொண்டாள்.

திருமணம் முடித்து நான்கு வருடமாக குழந்தையும் இல்லை. வைத்தியர்களை சந்தித்தும் எந்த குறைப்பாடு இல்லை விரைவில் குழந்தை பாக்கியம் ஆகும் என்றார்களே தவிர, குயிலிக்கு தாய்மை பேறு கிடைப்பது தாமதமாகியது. உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியுமா? குயிலி கண்ணீர் விடாத நாட்களே இல்லை.

ஆனால், நந்தினி சிறிதும் கவவையில்லாமல் பணத்திலே குறியாக இருந்தாள். சீட்டிலும் பலரை ஏமாற்ற தவறியதில்லை. போடும் சீட்டு எண்ணிக்கையை விட மேலதிகமாக ஒரு எண்ணை கூட்டி சீட்டு முடியும் தருவாயில் பத்தை பதினொன்றாக மாற்றுவாள்.

ஏமாற்றி பிழைப்பை நடத்துவதால் தான் அவள் பெற்ற மகள் தாய்மையடையாமல் இருப்பதாக ஊரார் கதைக்கத் தொடங்கினார்கள். குயிலி வைத்திய சிகிச்சைக்கு சென்றாளே தவிர அவள் கணவன் மதன் எந்த கவலையுமற்றவனாய் சிகிச்சையில் தன்னை ஈடுப்படுத்த முன் வரவில்லை. நந்தினியின் கணவர் ருத்திரனுக்கு தீடிரென்று ஏற்பட்ட மாரடைப்பால் வைத்தியசாலையில் அனுமதித்திருந்தார். நந்தினி என்ன செய்வது என்று குழம்பி போயிருந்தாள். காரணம் இதயத்தில் நான்கு அடைப்பாம் ஒப்ரேசன் ஒரு மாதத்திற்குள் செய்ய வேணுமாம். செலவுகள் எல்லாம் சேரத்து முப்பது இலட்சம் தேவையாக இருந்தது.

இந்த செய்தியை வைத்தியர் சொன்னதுமே நந்தினிக்கு தன் தலையில் இடி விழுந்ததாக இருந்தது. தான் வயிற்றை கட்டி வாயை கட்டி சேமித்த காசு இப்போது இப்படி போக போகுதே என்ற கவலை. மறு பக்கம் கணவரின் உயிரை காப்பாற்ற வேண்டும் என்ற நிலை.

> **நந்தினியின் மகள் குயிலி அப்பா ருத்திரன் போல நன்றாக படித்து வேலைக்காக காத்திருக்கும் போதே திருமணம் முடித்து வைத்து விட்டாள் அம்மா நந்தினி. தாயின் நச்சரிப்பாலே இந்த திருமணத்திற்கு ஒத்துக்கொண்டாள்**

“ஊரில் உள்ளவர்களை ஏமாற்றி அவள் பிழைப்பதால்தான் இந்த சோதனையடி அவளுக்கு” பானுவும், சுந்தியும் இன்னும் சிலரும் கிணற்றடியில்......இவர்களுக்கு இதேவேலையாக போச்சு.

மகள் குயிலி தந்தையின் ஒபரேசன் நல்லப்படியாக நடக்க வேண்டும் என்று வேண்டாத தெய்வமில்லை. தனியார் மருத்தவமனையில் ருத்திரனுக்கு ஒப்ரேசன் நல்லப்படியாக நடந்து முடிந்தது. உடல்நிலையை கருத்திற் கொண்டு அதிபர் வேலையில் இருந்து ஓய்வு பெற்றார். வேலையில் ஓய்வு நிலை வயதை அடையாதப்படியால் ஒய்வூதியம பெற ஆறு வருடம் காத்திருக்க வேண்டிய நிலை.

“நந்தினி என்ன யோசிக்கிற” ருத்திரன் குரலை கேட்டதும் நந்தினி சுயநினைவுக்கு வந்தவளாய் “ஒண்டுமில்லப்பா ஒப்ரேசன் நல்லப்படியாக நடந்துட்டு கையிருப்பும் செலவாகிட்டு இப்ப செலவுக்கு கூட காசு இல்ல என்ன செய்வது என்றே புரியல” நந்தினி தன் நிலையை கணவருக்கு உணர்த்தினாள்...

ருத்திரன் தன் இயாலாமையை எண்ணி வருந்தினான். அன்று குயிலி வீட்டிற்கு வந்தாள். தாய்க்கு உதவியாக இரண்டு நாட்கள் அங்கே நின்று போக வந்ததாக கூறினாள். ஆனால், கணவன் மதன் அவளை விவாகாரத்து செய்ய போவதாக கூறி சண்டை பிடித்ததாக நந்தினியிடம் கூறி அழுதாள். “அப்பாவிடம் இந்த நிலையில என்ட விவாகாரத்து விசயம் தெரிந்தால் அவரின் உயிருக்கே ஆபத்து அம்மா...”

“சரி யோசிக்காத நான் செய்த பாவம் தான் குடும்பத்தையே சீரழிக்குதுரூநரழவ் என்றாள் நந்தினி...”

இதனை ஊகித்தறிந்து கொண்ட ருத்ரன் விவாகரத்து பெற்ற மகளை பார்த்துக் கண்ணீர் விட்டு நித்தமும் புலம்புவார்.

“அப்பா உங்கட மகளாய் காலம் முழுவதும் இருக்க ஆசைப்படுறன் எனக்கு தாய்மையடைவதில் எந்த குறையும் இல்லை என்றால் மதனுக்கு தான் குறை இருப்பதாகவே நான் நினைக்கிறன் ஆனால், இந்த சமூகம் பெண்ணை தானே மலடி என்பார்கள் ஆண்கள் அனைவரும் சமூகத்தில் தலை நிமிர்ந்து தான் போகிறார்கள், பெண்கள் நாம தான் தலை குனிந்து போகனும் இது எம் தலை விதி அப்பா...” என்றாள் குயிலி வீட்டு கஷ்டத்தால குயிலி வீட்டில் இருந்தே பிள்ளைகளுக்கு தனியார் வகுப்புகளை எடுத்தாள்.

அந்த வருமானத்தில் வீட்டின் செலவுகள் போய்கொண்டிருந்தது. வட்டிக்கு விட்ட நந்தினி வட்டி என்ற நாமத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாள். மதன் இரண்டாவதாக திருமணம் செய்தும் குழந்தை பாக்கியம் தாமதிப்பதை அவதானித்த குயிலி தனக்குள்ளே வேதனை கொண்டாலும் ஏதோவொர் இறுக்கத்தளர்வுடன் சிரிப்பை உதிர்த்தாள். குறை எங்கிருந்து ஆரம்பம் என்பதை அவள் உணர்ந்தாள்.

ஊரார் இப்ப மாற்றி கதைப்பதை கேட்டாள். “மதனுக்கு தான்டி ஏதோ குறையாம் அது தான் இரண்டாம் தாரத்திட வயித்துலயும் புழு பூச்சிய காணல” அதே கிணற்றடி அதே பானுவும், சுகந்தியும், இன்னும் சிலரும்.

# “எழுத்து எனக்கு போதை”



செய்னு ஆப்தீன் ஸபானா பானு
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜலீலா முஸம்மில் கடந்த 15 வருடங்களாக வைத்திய அதிகாரியாகக் கடமை புரிந்து வருபவர். தற்போது ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் தேசிய இரத்தப் பரிமாற்ற சேவையில் ஐந்து வருடங்களாகப் பணியாற்றி வரும் இவர் சுமார் ஆறு வருடங்களாக இலக்கியத் துறையில் மிளிர்ந்து கொண்டிருக்கிறார். அவருடனான நேர்காணல் தொகுப்பிது.

**கேள்வி:** உங்கள் இலக்கியப் பயணத்தின் தொடக்கப் புள்ளியிலிருந்து இதுவரையான அடைவுமட்டங்கள் பற்றிப் பகிர முடியுமா?

பதில்: எனக்கு சிறுபராயம் முதலே வாசிப்பில் ஆர்வம். வாசிப்போடு உறவு கொண்டிருந்ததாலேயே தமிழ்மொழியில் பற்றும் விருப்பும் வந்தது. எனது தந்தை ஹயாத்து முஹம்மது அவர்கள் கணித ஆசிரியராக இருந்தபோதும் தமிழ்மொழியிலும் தேர்ச்சிபெற்றவராக இருந்தார். அவரே எனக்கு இலக்கியத்தில் ஆர்வம் ஏற்படத் தூண்டுகோலாக இருந்தவர். கல்வி ரீதியான அடைவைப் பெற்றுக்கொண்ட பின் நண்பி ஒருவர் மூலமாக புலன் குழுமங்களில் எழுதத்தொடங்கினேன். இதுவே எனது இலக்கியப் பயணத்தின் ஆரம்பம் எனக்கொள்ளலாம்.

இதுவரை இரண்டு கவிதை நூல்கள் வெளியீடு செய்துள்ளேன். எனது கன்னி வெளியீடான ‘சிறகு முளைத்த மீன்’ புதுக்கவிதை நூல் 2022 சென்னைப் புத்தகக் கண்காட்சியில் வெளியீடு செய்யப்பட்டது.

இரண்டாவது சுயவெளியீடு ‘தூரிகை வரையும் மின்மினிகள்’ ஹைக்கூ கவிதை நூல் 2023இல் இலங்கையில் வெளியீடு செய்யப்பட்டது. சுமார் 40க்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு இதழ்களில் எனது கவிதைகள், கட்டுரைகள், ஊக்கப் பதிவுகள் வெளிவந்துள்ளதோடு கவிதைத்தொகுப்பு நூல்கள் பலவற்றிலும் எனது கவிதைகள் இடம்பிடித்துள்ளன. இந்தியாவிலும் இலங்கையிலும் சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட தொகுப்பு நூல்களில் எனது கவிதைகள் வெளியாகியுள்ளன.

பல்வகையான கட்டுரைகள், மருத்துவக்குறிப்புகள், ஊக்கப் பதிவுகளையும் எழுதுகிறேன். பல்வேறுபட்ட விருதுகளும், வெற்றிச் சான்றிதழ்களும் இலக்கியத்துறையில் கிடைக்கப்பெற்றுள்ளன. இலங்கைக் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து ஏறாவூர் பிரதேச செயலகம் நடாத்திய பிரதேச கலை இலக்கியப் போட்டியில் பாடலாக்கப்போட்டி, செய்யுளப் போட்டி, சிறுகதைப் போட்டி போன்றவற்றில் கடந்த இரு வருடங்களாக வெற்றிச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளதுடன், பதிவு செய்யப்பட்ட கலை இலக்கிய மன்றங்களில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றிச் சான்றிதழ் பெற்றுள்ளேன்.

அத்துடன், பல்வேறுபட்ட விருதுகளும் கிடைத்துள்ளன. குறிப்பிட்டுச் சொல்லப்போனால், இலங்கைக் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து ஏறாவூர் பிரதேச செயலகம் நடத்திய பிரதேசக் கலையிலக்கிய விழா மற்றும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில், கவிதை இலக்கியத்துக்காக 2022இல் கலைத் தாரகை விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, 2023இல் இளங்கலைஞர் விருதும் பெற்றுள்ளேன். அத்துடன் தேனி கலை இலக்கிய மன்றத்தின் கவித்தேன் விருது, ஏறாவூர் தமிழ்ச்சாரல் கலை இலக்கியவட்டத்தின் கவிச்சாரல் மற்றும் கவிமுகில்விருது, ஸ்ரீலங்கா பெண்கிளப் அமைப்பின் கடந்த மூன்று ஆண்டு விழாவிலும் இலக்கியச் சேவைக்கான மூன்று விருதுகள், தமிழ்நாடு கலை இலக்கிய மன்றங்களான மதுரமொழிக் கவிச்சங்கத்தினால் வழங்கப்பட்ட தமிழ்வேள் விருது, பசுமைவாசல் பவுண்டேஷன் அமைப்பினால் வழங்கப்பட்ட செம்மொழிக் கவிமாமணி விருது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**கேள்வி:** உங்களை எழுதத் தூண்டிய காரணி எது? எழுதுவதை நீங்கள் தொழிலாக நினைக்கின்றீர்களா?

பதில்: சிறுபராயத்தில் பள்ளித்தோழியின் பிரிவில் விசும்பியபொழுது உள்ளம் பிதற்றியதற்கேற்ப கவிதையொன்றை வடித்த ஞாபகம் இருக்கிறது. கவிதையென்பது கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையிலான இதய சம்பாஷணை உணர்வுப் பரிமாற்றம், காலம் தாண்டிய பயணம் என பல்வேறுபட்ட வியாக்கியானங்களைக் கூறலாம். எழுதவயப்பட்டவர்கள் வரம்பெற்றவர்கள் எழுதிக்கொண்டே தான் இருப்பார்கள். எழுத்து எனக்கு போதை, ஆனந்தமே தவிர தொழில் கிடையாது. கரும்பு தின்னக் கூலியா வேண்டும்?






எழுத்து எனது வேலைப்பழுவைத் துரத்தி உற்சாகம் தருவிக்கிறது. அதைத் தருவதிலும் சுகிப்பதிலும் ஆவலுடன் இருக்கிறேன்.

**கேள்வி:** மருத்துவப் பணிக்கும், எழுத்துப் பணிக்கும் இடையில் உங்கள் நேரத்தை எவ்வாறு சமன் செய்கிறீர்கள்?

பதில்: சிறந்த குடும்பத் தலைவியென்பவள் குடும்பத்தையும் வீட்டையும் மிகவும் சாமர்த்தியத்துடன் நிர்வகிப்பவளே. அவளது நிர்வாகம் சூழ்நிலைக்கேற்ப வேகமாகவும் புத்திசாலித்தனமாகவும் ஒரே ஓட்டத்தில் செல்ல வேண்டும். வைத்தியத் தொழில் என்பது மிகவும் பொறுப்பு மிக்கதும், வேலைப் பளு மிக்கதுமான ஒரு தொழில். மிக அவதானத்துடனும் நோயாளர் நலனில் அக்கறை கொண்டும் செய்யக்கூடிய சமூகசேவையாக அது இருக்கிறது. பெண்ணென்ற ரீதியில் பணிக்குச் செல்லுதலும், குடும்பப் பொறுப்புகளும் இரட்டைச்சுமையாக அழுத்தினாலும் அதைத் திறம்படச் செய்வதில் மிகவும் கவனமெடுக்கிறேன். இவ்விடத்தில் நேர முகாமைத்துவம் மிக அத்தியாவசியமாகிறது.

அந்த வகையில், எனக்கு மிகவும் பிடித்தமான எழுத்துத்துறையில் செலவழிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன். எனது எல்லா வகையான முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருக்கும் கணவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். முன்கூட்டியே திட்டமிட்டு ஒவ்வொரு வேலையும் செய்யும் பழக்கமே இலக்கியத்திலும் தொழிலிலும் சமாந்தரமாகப் பயணிப்பதற்கு உதவுகிறது. இவ்வாறான திட்டமிடல்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் எனது தந்தையே.

**கேள்வி:** உங்கள் மருத்துவ வாழ்வில் எழுத்துக்கள் குறுக்கிடும் ஒரு மறக்கமுடியாத அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

பதில்: மறக்க முடியாத அனுபவம் என்பதை விடப் பொதுவாகக் கூறப்போனால், இப்போது சமூகத்தில் நோய்கள் மிகவும் அதிகரித்து விட்டன. அதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், நிவாரணம் வழங்குவதும் ஒவ்வொரு மருத்துவரினதும் கடமை. எழுத்து அப்பணியைச் செவ்வனே செய்யும் கருவியாகும். நாளாந்தம் சந்திக்கும் நோயாளர்களுடனான அனுபவத்திலும் நான் நிறையவே கற்றுக் கொள்கிறேன். அவையே பெரும்பாலும் எழுத்துருவாக்கம் பெறுகின்றன.

**கேள்வி:** உங்கள் எழுத்துக்கள் அதிகம் எக்கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டிருக்கும்? அதனூடாக சமூகத்துக்குத் தெரிவிக்க விரும்பும் விடயங்கள் எவை?

பதில்: எனது எழுத்துக்கள் வாழ்வியலின் எல்லாக் கருப்பொருள்களையும் தொட்டுச் செல்கின்றன என்றே நினைக்கிறேன். உள்ளத்தில் ததும்பித்தேங்கி நிற்கும் உணர்வுகளை எல்லாம் வெளிப்படுத்தவே ஒவ்வொரு எழுத்தாளனும் எழுத்தாணியெடுக்கிறான். மனதை வலிக்கச்செய்த, சிரிக்கச்செய்த, மௌனமாக அழச்செய்த, அத்தனை உள்ளக, வெளியகக்காரணிகளும் எழுதுவதற்குத் தூண்டுபவையாக அமைவன. சமூகத்துக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவல்ல எழுத்துக்களே வீரியமானவை. அவற்றைத்தான் நானும் எழுதுகிறேன்.

**கேள்வி:** உங்கள் அனுபவங்கள் உங்கள் எழுத்தின் நம்பகத்தன்மையை அல்லது ஆழத்தை மேம்படுத்துவதை நீங்கள் எந்தளவு உணர்ந்திருக்கிறீர்கள்?

பதில்: நிறையவே வரவேற்புக் கிடைத்துள்ளது. ஊக்கம் தருகின்ற நிறைய நண்பர்கள், நலன்விரும்பிகள் வாய்த்திருக்கிறார்கள். அவ்வாறான வேளைகளில் எனது எழுத்துக்கள் மிகுதியாக நம்பகத்தன்மையும், ஆழமும் பெற்றுக் கொள்கின்றன என்று நினைக்கிறேன்.

**கேள்வி:** எப்போதாவது விமர்சனங்களைச் சந்தித்திருக்கிறீர்களா அவ்வாறெனில் அவை எப்படியானவை, அத்தகைய கருத்துகளுக்கு நீங்கள் பதிலளிப்பது எவ்வாறு?

பதில்: ‘காய்க்கின்ற மரம்தான் கல்லடிபடும்’ என்ற முதுமொழிக்கமைய நானும் விமர்சனங்களைச் சந்தித்துள்ளேன். அவற்றையெல்லாம் என் வளர்ச்சிக்காகவே பயன்படுத்திக் கொள்கிறேன். எழுத்துலகில் காழ்ப்புணர்ச்சி மிகவும் அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாகப் பெண்கள் என்றால் கேட்கவே வேண்டாம். இருப்பினும் அதை வென்று கால்தடம் பதிப்பதே ஒவ்வொரு எழுத்தாளர்களினதும் கனவாக இருக்கிறது. என்னை வளர்ச்சியடைய வைக்கும் கட்டமைப்பான விமர்சனங்களை கட்டாயம் வரவேற்கிறேன்.

**கேள்வி:** எவ்வகையான கவிதைகளை எழுதுவதில் உங்களுக்கு அதிக ஆர்வம்?

பதில்: எல்லா வகையான கவிதைகளிலும் ஆர்வமுண்டு. புதுக்கவிதைகள், ஹைக்கூ, மற்றும் தன்முனைக் கவிதைகளைத் தற்போது எழுதி வருகிறேன். மரபுக்கவிதைகள் எழுதுவதற்கும் கற்றுக் கொண்டிருக்கிறேன். வாழ்க்கைத் தத்துவங்களை வெளிப்படுத்தும் சிறு கவிதைகளும் அவ்வப்போது எழுதுவதுண்டு.

**கேள்வி:** எழுத்துக்கள் மூலம் சாதனை படைக்க ஆர்வமுள்ளவர்களுக்கு நீங்கள் என்ன ஆலோசனை வழங்குவீர்கள்?

பதில்: புதிய படைப்பாளிகளுக்கு நான் வழங்கும் ஆலோசனையானது நன்றாக வாசிப்பதுதான். உங்கள் வாசிப்புத்திறனை வளர்த்துக் கொள்ளும்போது மொழித்திறன் ஆளுமையடைகிறது. ‘கண்டது கற்கப் பண்டிதனாவான்’ என்ற வழிமுறையைக் கடைப்பிடியுங்கள். உங்கள் எழுத்து இன்னும் வளம்பெறும். மனதில் தோன்றும் எண்ணக் கருக்களை அப்படியே எங்கேயாவது எழுதி வைத்துக் கொள்ளுங்கள். காலத்தின் போக்கினில் அதனை மெருகேற்றிக் கொள்ளுங்கள். நிச்சயம் நீங்களும் நல்லதோர் படைப்பாளுமையாய் மாறலாம்.

‘நான் இன்று எதையெல்லாம் என்னுடைய ஒரே இதயத்தால் சொல்கின்றேனோ அது நாளை ஆயிரக்கணக்கான மக்களின்

இதயத்தால் சொல்லப்படும்’ எனும் கலில் ஜிப்ரானின் கூற்று எப்போதும் எனக்குள் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

சென்னை

### பயங்கரவாத அமைப்புக்கு ஆள் சேர்த்த விவகாரம்;

# சைபர் கிரைம் அறிக்கை

பயங்கரவாத அமைப்புக்கு ஆள் சேர்த்ததாக உபா சட்டத்தின் கீழ் ஆறு பேர் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் அது தொடர்பான அறிக்கை, தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை இராயப்பேட்டையைச் சேர்ந்த தந்தையும், இரண்டு மகன்களும் பல்வேறு நாடுகளில் தடை செய்யப்பட்ட அமைப்பாக உள்ள ‘ஹிஷாப் உத் தஹிரீர்’ என்ற தடை செய்யப்பட்ட அமைப்புக்கு ஆள்சேர்ப்பு கூட்டங்களை நடத்தியது தெரிய வந்ததையடுத்து, அவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், விசாரணையில் அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் தண்டையார்பேட்டை மற்றும்



தாம்பரம் ஆகிய பகுதிகளில் சோதனை நடைபெற்றது.

சோதனையின் முடிவில் மூன்று பேர் அடங்களாக, மொத்தமாக ஆறு பேர் பயங்கரவாத செயல்கள் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட நிலையில், சென்னை சைபர் கிரைம் பொலிஸார் தமிழக அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளனர்.


இந்நிலையில், பயங்கரவாத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழ் ஒருவர் கைது செய்யப்படும் பட்சத்தில் தேசியப் புலனாய்வு முகமை (NIA) தாமாக முன்வந்து விசாரிக்கும். அதன் கீழ் நடைபெறும் நடவடிக்கைகள் மற்றும் கைதுகள் குறித்து சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கு சைபர் கிரைம் பொலிஸார் அறிக்கை அளிப்பர்.

அந்த நடைமுறையின் அடிப்படையில் தற்போது தமிழக அரசுக்கு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இந்த அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும். அதன் பின்னர் என்.ஐ.ஏ முழுமையான விசாரணையில் இறங்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளது.

சென்னை

# “மோடியின் தியான நாடகம் இந்தியாவுக்கே அவமானம்”

### செல்வப்பெருந்தகை விமர்சனம்



மக்களவை தேர்தல் முடியும் நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கன்னியாகுமரிக்கு வந்து அங்குள்ள விவேகானந்தர் பாறையில் 3 நாட்கள் தியானம் மேற்கொள்கிறார். இந்நிலையில், “மோடியின் தியான நாடகம் இந்தியாவுக்கே அவமானம்” என தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் செல்வப்பெருந்தகை விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “விவேகானந்தர் மண்டபத்தில் மூன்று நாட்கள் தியானம் செய்வதென நரேந்திர மோடி திட்டமிட்டிருக்கிறார். இறுதிகட்ட தேர்தல் நடைபெற இருக்கிற 57 மக்களவைத் தொகுதிகளில் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக விவேகானந்தர் பாறையில் தியானம் செய்ய பிரதமர் மோடி தேர்வு செய்திருப்பதைவிட ஒரு அரசியல் மோசடி வேறு எதுவும் இருக்க முடியாது. பதவிக்காக அவர் எவ்வளவு தரம் தாழ்ந்த நிலைக்கும் செல்வார் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

சுவாமி விவேகானந்தர் தம் வாழ்நாள் முழுவதும் மத நல்லிணக்கத்தைக் கடைப்பிடித்து இந்து மதத்தை உலகம் முழுவதும் பரப்பியவர். அனைத்து மதத்தினராலும் அன்போடு நேசிக்கப்பட்டவர். அவர் ஒரு சாந்த சொரூபி. அதேநேரத்தில், தமது நாவன்மையால் உலகத்தின் கவனத்தை ஈர்த்தவர்.

ஆனால், குஜராத் மாநில முதல்வராக நரேந்திர மோடி இருந்தபோது ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் பகிரங்கமாகப் படுகொலை செய்யப்பட்டு, ரோம் நகர் தீப்பற்றி எரிந்தது. அப்போது அதை கண்டும் காணாமல் இருந்தவர் தான் மோடி. ஆகவே, அவர் ஆன்மிக ஞானக்கடல் விவேகானந்தர் பாறையில் தியானம் செய்வது என்பது ஏமாற்று நாடகம். மோடி தியானம் செய்கிற மூன்று நாட்களும் அங்கு சுற்றுலா பயணிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இது மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கின்ற செயலாகும். இதை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

நீலகிரி

### கிணற்றில் விழுந்த யானை குட்டி

# பல மணி நேர போராட்டத்திற்கு பிறகு மீட்பு

26 அடி கிணற்றில் விழுந்த யானை குட்டி 8 மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் பத்திரமாக மீட்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் பந்தலூர் குறிஞ்சி நகர் பகுதியில் கடந்த 28ஆம் திகதி நள்ளிரவில் யானை கூட்டத்திலிருந்த குட்டி யானை ஒன்று தவறி கிணற்றுக்குள் விழுந்தது.

இந்நிலையில், தகவல் அறிந்த வனத்துறையினர் நேற்று காலை 8 மணி அளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு கிணற்றுக்குள் இருக்கும் குட்டி யானையை மீட்க நடவடிக்கை எடுத்து வந்தனர்.

3 மணி நேரத்துக்கும் மேலாக ஒரு பொக்லைன் இயந்திரத்தின்



உதவியுடன் குட்டி யானையை மீட்கும் முயற்சிகள் நடைபெற்று வந்தன. அது முடியாமல் போனதால் இரண்டாவதாக இன்னொரு பொக்லைன் இயந்திரமும் வரவழைக்கப்பட்டு கிணற்றைச் சுற்றி மண்ணை அப்புறப்படுத்தும் பணி நடைபெற்றது.

இந்நிலையில், கிணற்றுக்குள் சிக்கியுள்ள குட்டி யானை வெளியில் வர வழி தெரியாமல் தத்தளித்து வந்த நிலையில், ஆக்ரோஷம் அடைந்த தாய் யானை குட்டி யானையைத் தேடி கிணற்றின் அருகே வந்துவிடாமல் இருக்க வனத்துறையினர் தாய் யானை உள்ளிட்ட மற்ற யானைகளை தனிக் குழுவாக நின்று கண்காணித்து வந்தனர்.

இதனையடுத்து, 8 மணி நேர போராட்டத்துக்கு பிறகு, ஜேசிபி இயந்திரங்களுடன் யானை குட்டியை தீயணைப்புத் துறையினர் மீட்டு தாய் யானையோடு இணைத்து விட்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியா

### “மீண்டும் ஒரு தொற்று நோய்”

# விஞ்ஞானி எச்சரிக்கை



கொரோனா தொற்றை அடுத்து தற்போது வேறொரு பெருந்தொற்று உலகை தாக்க தயாராக உள்ளதாக இங்கிலாந்தின் முன்னாள் தலைமை அறிவியல் ஆலோசகர் சர் பேட்ரிக் வோலன்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், “உலகில் அடுத்த பெருந்தொற்று வருவது உறுதி. ஆக, அத்தொற்றை முன்கூட்டியே கண்டறிந்து அதை தடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இந்த நடவடிக்கையை எந்தவிதத்திலும் தாமதித்து விடக் கூடாது.

பெருந்தொற்றை கண்டறியும் முறையை உருவாக்குவது, தடுப்பூசிகள், சிகிச்சை முறை ஆகியவற்றை நாம் தயாராக வைத்திருந்தால், கொரோனா தொற்றையேகூட நாம் தடுத்திருக்கலாம். இவற்றை நம்மால் உருவாக்கிவிட முடியும் என்றாலும் சர்வதேச ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

2021ஜி 7 மாநாட்டில், கொரோனா பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில், அடுத்த பெருந்தொற்றை தடுக்க அனைவரும் ஒத்துழைப்போம் என்று உறுதிபூண்டனர். ஆனால், தற்போது இதனை அனைவரும் மறந்துவிட்டனர்.

தொற்று காலத்தில் மட்டும் தொற்றுக்காக அதிகம் கவனம் செலுத்திவிட்டு, மற்ற காலங்களில் தொற்றுக்கான அறிகுறிகள் இல்லை என்று நடவடிக்கை எடுக்காமல் இருக்கக்கூடாது.

அப்படி அலட்சியமாக விட்டு விட்டால் அது மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்தும். ஆகவே, பெருந்தொற்று தொடர்பாக, அதை எப்படி கையாள வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை கொண்டு வர வேண்டும்.

இந்த ஒப்பந்தம், தொற்றுநோய் ஏற்படும் காலங்களில் உலக நாடுகள் அதை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்கின்றன என்பதை முன்மொழியும் ஒப்பந்தமாக இருக்க வேண்டும். இந்த விவகாரத்தை பொறுத்தவரை போதிய கவனத்தை நாடுகள் செலுத்துவதாக தெரியவில்லை” என்று அவர் தெரிவித்துள்ளார்.

சீனா

### துப்பாக்கி பொருத்தப்பட்ட

# ரோபோ நாய்



இயந்திர துப்பாக்கி பொருத்தப்பட்ட ரோபோ நாயை சீன இராணுவம் அறிமுகம் செய்துள்ளது.

இந்நிலையில், கம்போடியா–சீனா இடையே நடைபெறும் கோல்டன் டிராகன் 2024 கூட்டு இராணுவப் பயிற்சியில் இந்த நாய் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ரிமோட் மூலம் இயங்கக் கூடிய இந்த ரோபோ நாய், நடந்து, குதித்து, கீழே விழுந்து, பின்புறமாக ஓடிய காட்சிகள் இணையத்தில் வெளியாகி பேசுபொருளாகியுள்ளது.

மேலும், இந்த ரோபோ நாய் மீது பொருத்தப்பட்டுள்ள துப்பாக்கியில் 4D லென்ஸ் உதவியுடன் துல்லியமாக ரிமோட் மூலம் சுட முடியும் என்று தெரிவித்த சீன இராணுவத்தினர், இதன் மூலம் போரின்போது ஏற்படும் மனித உயிரிழப்பை முடிந்தளவு தவிர்க்கலாம் என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பயிற்சிப் போட்டியில்

# நெதர்லாந்திடம் தோற்ற இலங்கை



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடாவில் செவ்வாய்க்கிழமை(28) நடைபெற்ற நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் இலங்கை தோற்றது.


இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட நெதர்லாந்து, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், மிஷெல் லெவிட் 55, அணித்தலைவர் ஸ்கொட் எட்வேர்ட்ஸ் ஆட்டமிழக்காமல் 27, டெஜா நிடமனுரு 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் டுனித் வெல்லலாகே 4-0-26-1, சரித் அசலங்க 1-0-5-0, தசுன் ஷானக 2-0-12-0, கமிந்து மெண்டிஸ் 2-0-15-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

உலகக் கிண்ணத் தொடரின் குழுநிலைப் போட்டியிலும் நெதர்லாந்தை இலங்கை எதிர்கொள்ளவுள்ள நிலையில், அணித்தலைவர் வனிடு ஹசரங்க, மகேஷ் தீக்‌ஷன ஆகியோர் பந்துவீசியிருக்கவில்லை.

பதிலுக்கு 182 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஹசரங்க 43 (15), ஷானக ஆட்டமிழக்காமல் 35 (20), தனஞ்சய டி சில்வா 31 (22) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அர்யன் டுட் 3, கைல் கிளெய்ன் 2, லோகன் வான் பீக் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

### மாஸ்டர் தடகள சம்பியன்ஷிப்பில் பிரகாசித்த

# ஹுமாயூன், துபைலுக்கு வாழ்த்து



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் நகரைச் சேர்ந்த விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களும், சகோதரர்களுமான ஆசிரியர் எம்.எப்.எம். ஹுமாயூன், ஆசிரியர் எம்.எப்.எம். துபைல் ஆகிய இருவரும் மாஸ்டர் தடகள சம்பியன்ஷிப்பில் கலந்துக்கொண்டு வெற்றியடைந்து சாதித்துள்ளனர்.

உயரம் பாய்தலில் ஹுமாயூன் ஆசிரியர் தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார். இவர் 1.5 மீற்றர் உயரத்தை தாண்டி இந்த தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார். இதேவேளை, இவர் நீளம் பாய்தலில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

அதேபோன்று ஆசிரியர் துபைல் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை பெற்றார்.

இவர்களது இந்த அயராத தொடர் முயற்சிக்கும், வெற்றிக்கும் புத்தளம் நகரின் முக்கூட்டு தலைமைகளான அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா. புத்தளம் நகர கிளை, புத்தளம் பெரிய பள்ளி மற்றும் புத்தளம் நகர சபை என்பன தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# வி.பி.எல். தொடர்: சம்பியனான கும்புறுப்பிட்டி



ஹஸ்பர் ஏ.எச்.

குச்சவெளி கோட்டத்திலுள்ள அணிகள் பங்குபற்றிய வி.பி.எல். கிரிக்கெட் தொடரில் கும்புறுப்பிட்டி அணி சம்பியனானது.

எட்டு அணிகள் பங்கேற்ற இத்தொடரில், ஞாயிற்றுக்கிழமை(26) நடைபெற்ற கோணேசபுரி அணியுடனான இறுதிப் போட்டியில் வென்றே கும்புறுப்பிட்டி அணி சம்பியனானது.




### கோட்ட மட்ட கிரிக்கெட் தொடரில்

# வெற்றிவாகை சூடியது இக்ரஹ் வித்தியாலயம்

எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில், கிரிக்கெட்டில் ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயம் சம்பியனாக வெற்றிவாகை சூடியுள்ளது.

ஓட்டமாவடி அமீர் அலி பொது விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை(28) நடைபெற்ற வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையுடனான இறுதிப் போட்டியில் வென்றே ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயம் சம்பியனானது.

ஐந்து ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயம், ஐந்து ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 70 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு 71 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அந்நூர் தேசிய பாடசாலை, ஐந்து ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 64 ஓட்டங்களையே பெற்று ஆறு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

### அட்டாளைச்சேனை மார்க்ஸ்மேன்

# சீருடை அறிமுகம்



எம்.எப்.றிபாஸ்

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக் குட்பட்ட மார்க்ஸ்மேன் விளையாட்டுக் கழகத்தின் இவ்வாண்டுக்கான சீருடை அறிமுக நிகழ்வுவானது கடந்த வெள்ளிக்கிழமை (24) இடம்பெற்றது.

கடந்த காலங்களில் இப்பிராந்தியத்தில் விளையாட்டுக் கழகங்களின் வளர்ச்சியில் பல்வேறுபட்ட ஆலோசனைகளை வழங்கிய ஓய்வு பெற்ற மாவட்ட மெய்வவல்லுநர் பயிற்றுவிப்பாளர் எஸ்.எல்.தாஜுதீனின் சேவையை பாராட்டியும், பிரதம அதிதியான கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹீப்புக்கு அம்பாறை மாவட்டத்தில் விளையாட்டுக் கழகங்களுக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்காக கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 30 , மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.